## மதுரை வடக்கு – தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பாக – திருமங்கலத்தில்

# இந்திய தேர்தல் ஆணையத்தைக் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

### மாவட்டச் செயலாளர்கள் - அமைச்சர் பி.மூர்த்தி - மு.மணிமாறன் அறிக்கை !





மதுரை, நவ.8-

மதுரை வடக்கு மற்றும் தெற்கு மாவட்ட திமுக சார்பாக இந்திய தேர்தல் ஆணையத்தை கண்டித்து வருகிற 11ஆம் தேதி திருமங்கலம் சந்தைப்பேட்டையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளதாகவும் இதில் திமுக மற்றும் கூட்டணி கட்சியின் பெரும் திரளாக பங்கேற்க வேண்டுமென வடக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, மதுரை தெற்கு மாவட்ட செயலாளர் மு. மணிமாறன் ஆகியோர் தமது அறிக்கையின் மூலம் தெரிவித்துள்ளனர் அதன் விபரம் வருமாறு:-

கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டில் தேர்தல் நெருங்கி வரும் நிலையில் திடீரென இந்திய தேர்தல் ஆணையம் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு எஸ் ஐ ஆர் கொண்டுவந்ததை கண்டித்து மத சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் சார்பில் பதினோராம் தேதி கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என அறிவித்திருந்தார்

அதன்படி மதுரை வடக்கு மற்றும் தெற்கு மாவட்ட திமுக சார்பாக திருமங்கலம் சந்தைப்பேட்டையில் வருகிற 11.11.2025 செவ்வாய்க்கிழமை காலை 9 மணி அளவில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது

இந்த ஆர்ப்பாட்டத்தில் மதுரை வடக்கு மற்றும் தெற்கு மாவட்ட கழகத்தைச் சேர்ந்த மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சி தலைவர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழக, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகி கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், கிளைச் செயலாளர்கள், நிர்வாகி கள், கழகத்தினர், கூட்டணி கட்சி நிர்வாகிகள், கூட்டணி கட்சியினர் என அனைவரும் பெரும் திரளாக பங்கேற்று இந்திய தேர்தல் ஆணையத்திற்கு எதிரான தங்களது கண்டனங்களை பதிவு செய்திட வேண்டுமென வடக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, தெற்கு மாவட்ட செயலாளர் மு.மணிமாறன் ஆகியோர் தமது அறிக்கையின் மூலம் கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.



அருப்புக்கோட்டை சட்டமன்றத் தொகுதி, பாலையம்பட்டி முதல்நிலை ஊராட்சி பகுதிகளில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கு ரூ.20 லட்சம் மதிப்பீட்டில் பகிர்மான குழாய் பதித்தல் பணிகளை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர் . ராமச்சந்திரன் அடிக்கல் நாட்டினார்.

## மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில்

# “இந்தியத் தேர்தல் ஆணையத்தைக் கண்டித்து” மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

### மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., அறிக்கை!



மதுரை, நவ.8-

மதுரை மாநகர் மாவட்டச் செயலாளர் கோ. தளபதி எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தி.மு.க தலைமை கழக அறிவிப்பின்படி, “தமிழ்நாட்டில் சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு (S.I.R.) கொண்டு வந்துள்ள இந்தியத் தேர்தல் ஆணையத்தைக் கண்டித்து” மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியின் சார்பில் 1111 2025 செவ்வாய்கிழமை அன்று காலை 10.00 மணியளவில் மதுரை கோ.புதூர் பேருந்து நிலையம் அருகில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்! நடைபெறுகிறது.

மாவட்ட கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சி தலைவர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி செயலாளர்கள், வட்ட செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், கழக முன்னோடிகள், கழக உடன்பிறப்புகள் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் அனைவரும் திரளாக கலந்து கொண்டு தமிழ்நாட்டில் சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு (S.I.R.) கொண்டு வந்துள்ள இந்தியத் தேர்தல் ஆணையத்திற்கு எதிரான தங்கள் கண்டனத்தை பதிவு செய்திட வேண்டுமென கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## தேனி வடக்கு – தெற்கு மாவட்டத்தில் – மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சிகளின்

# மாவட்டத் தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள் கலந்தாலோசனைக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர்கள் தங்கதமிழ்ச் செல்வன் எம்.பி.–என்.ராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!





தேனி, நவ.8-

தேனி வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. தெற்கு மாவட்டச் செயலாளர் கம்பம் என். ராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ. ஆகியோர் கூட்டாக விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் மாவட்டத் தலைவர்கள். மாவட்டச் செயலாளர்கள் கலந்தாலோசனைக் கூட்டம் 09.11.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 10:00 மணி அளவில் தேனி தெய்வா ஹோட்டலில் இரு மாவட்டச் செயலாளர்கள் தலைமையிலும், தேனி மாவட்ட மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் மாவட்டத் தலைவர்கள் மாவட்டச்செயலாளர்கள் முன்னிலையிலும் நடைபெற உள்ளது.

எனவே இம்மாவட்டத்தில் உள்ள சட்டமன்ற உறுப்பினர்கள், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் மாவட்டத் தலைவர்கள். மாவட்டச் செயலாளர்கள் ஆகியோர் அனைவரும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பிக்கும் படி கேட்டுக்கொள்கிறோம்

பொருள்: தமிழ்நாட்டில் தேர்தல் ஆணையம், சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு (5.1.R) கொண்டு வந்துள்ளதைக் கண்டித்து தேனியில் வருகிற (11.11.2025 செவ்வாய்க்கிழமை) மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்துவது குறித்து.

இவ்வாறு அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

## அரசியல் கட்சிகளின் பேச்சுரிமை உள்பட

# அடிப்படை உரிமைகள் மீறப்படாமல் இருக்க வேண்டும்!

### பிரச்சாரம் செய்வதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் வகுப்பது குறித்து

### அனைத்துக்கட்சிக் கூட்டத்துக்குப் பின் – கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பேட்டி!



சென்னை, நவ.8-

கரூரில் கடந்த செப்டம்பர் 27-ஆம் தேதி தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் பங்கேற்ற பிரச்சாரக் கூட்டத்தில் நெரிசல் ஏற்பட்டு 41 பேர் உயிரிழந்தனர். ஏராள மானோர் காயம் அடைந்தனர்.

இனி இதுபோன்ற சம்பவம் நடைபெறாமல் இருக்க அரசியல் கட்சி பொதுக் கூட்டங்கள் பிரச்சாரங்களுள், ரோடு ஷோ நிகழ்ச்சிகள் போன்றவை நடத்தும் போது அசம்பாவிதங்கள் நிகழாமல் இருக்க அனைவருக்கும் அனுமதி வழங்குவதற்கான வழிகாட்டு நெறிமுறைகளை வகுத்து சமர்ப்பிக்க வேண்டும் என அரசுக்கு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

அதன் அடிப்படையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் சில நாட்களுக்கு முன்பு வழிகாட்டுதல்களை உருவாக்க ஆலோசனை நடத்தப்பட்டது.

அதைத் தொடர்ந்து நேற்றுமுன்தினம் சென்னை தலைமை செயலகத்தில் அனைத்து கட்சி கூட்டம் நடைபெற்றது. தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட கட்சிகள் மற்றும் நாடாளுமன்ற சட்டசபை உறுப்பினர்களைக் கொண்ட கட்சியின் பிரதிநிதிகளுடன் இந்த ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இதில் அரசு சார்பில் மூத்த அமைச்சர்கள் கே.என்.நேரு, எஸ்.ரகுபதி, மா. சுப்பிரமணியன் மற்றும் தலைமை செயலாளர் முருகானந்தம், உள்துறை செயலாளர், டி.ஜி.பி. உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தி.மு.க. கூட்டணி சார்பில் ஆர்.எஸ். பாரதி, என்.ஆர்.இளங்கோ எம்.பி. உள்பட பல்வேறு கட்சிகளின் பிரதிநிதிகள், தலைவர்கள் பங்கேற்று கருத்துகளை தெரிவித்தனர்.

பிரச்சார கூட்டங்களுக்கான விதிகள் அனைத்து கட்சிகளுக்கும் ஒரேமாதிரி இருக்க வேண்டும் என்று பலர் வலியுறுத்தினார்கள்.

**கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பேட்டி!**

இக்கூட்டத்தில் கலந்து கொண்ட கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி நிருபர்களிடம் கூறியதா வது:-

அரசியலமைப்பு சட்டபடி நிபந்தனைகளை வகுக்கலாம் என்று கூறி உள்ளோம். அரசியல் கட்சியின் அடிப்படை உரிமையான பேச்சுரிமை, எழுத்துரிமை பாதுகாக்கப்படும் வகையில் நிபந்தனை களை வகுக்க வேண்டும். அதன் அடிப்படையில் நீதிமன்ற உத்தரவுக்கு ஏற்ப தி.மு.க. நடந்து கொள்ளும்.

**அடிப்படை உரிமைகளை மீறக் கூடாது!**

எந்த நிபந்தனைகள் விதித்தாலும், அடிப்படை உரிமை கள் மீறப்படாமல் ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். அந்த வகையில் அரசு போடுகின்ற உத்தரவுகள், நீதிமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படும் பரிந்துரைகள் அடிப்படை உரிமைகளை மீறாமல் இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் தி.மு.க. தனது கருத்தை பதிவு செய்தது. அடிப்படை உரிமை பொருள் 19/1பி மீறாத வகையில் எந்த நிபந்தனைகள் விதிக்கப்பட்டாலும் தி.மு.க.அதை ஏற்றுக்கொள்ளும். இன்று எடுக்கப்படும் முடிவு, நீதிமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படும்.

இவ்வாறு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி பேட்டியளித்தார்.




## தி.மு.க. கலை இலக்கியப் பகுத்தறிவு பேரவை

# மாவட்ட, மாநகர அமைப்பாளர் – துணை அமைப்பாளர்கள் நியமனம்!

### தி.மு.க. கலை, இலக்கியப் பகுத்தறிவு பேரவை தலைவர் வாகை சந்திரசேகர் அறிவிப்பு!

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு, தி.மு.க. கலை, இலக்கியப் பகுத்தறிவு பேரவை மாவட்ட, மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

### ஈரோடு வடக்கு மாவட்டம்

தலைவர் - செ.சண்முகசுந்தரம், 19, வடக்கு வீதி, காந்திபுரம், நம்பியூர்.

துணைத் தலைவர் – பி.கே.காளியப்பன், சீதாலட்சுமி, கோபி.

அமைப்பாளர் - கே.எஸ்.சங்கர்சிவகுமார், சங்கரன் தோட்டம், கா.கணபதிபாளையம், அளுக்குளி, கோபி.

துணை அமைப்பாளர்கள் - 1) ப.பூபாலன், கே. ஜி.திருமண மண்டபம், புளியம்பட்டி, சத்தி. 2) எஸ். ரமேஷ்செல்வன், குருமந்தூர் மேடு, நம்பியூர். 3) எம். சதாசிவம், 26-பி, பிள்ளையார் கோவில் தெரு, சத்தி.

4) கு.ப.முருகசாமி, 188/21 புளியம்பட்டி ரோடு, நம்பியூர். 5) என்.டி.மகேந்திரன், 21/1, காந்திபுரம், ல. கள்ளிப்பட்டி, கோபி. 6) என்.காமராஜ், 166/7, கருப்பணன் வீதி, பதிபாளையம், சிறுவலூர், கோபி.

### விருதுநகர் வடக்கு மாவட்டம்

#### சிவகாசி மாநகரம்

தலைவர் - ஆர். செல்வம் 467, முத்து மாரியம்மன் காலனி, திருத்தங்கல், விருதுநகர் மாவட்டம்.

துணைத் தலைவர் - க. அரவிந்த் 1479, பி.கே.என். ரோடு, சோலை காலனி, சிவகாசி கிழக்கு - 626189, விருதுநகர் மாவட்டம்.

அமைப்பாளர் - இரா. அழகு முத்துமாரியம்மன் காலனி, பள்ளபட்டி ரோடு, திருத்தங்கல், விருதுநகர் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் – 1) பெ. பாரதி 32, மேலரத வீதி, சிவகாசி – 626123, விருதுநகர் மாவட்டம். 2) ஜோ. ஆசிர்வாதம் 486, பாரதி நகர் 4வது தெரு, சிவகாசி கிழக்கு - 626189, விருதுநகர் மாவட்டம். 3) பி. சுப்பிரமணியன் 147ஏ, அம்மன் கோவில்பட்டி நடுத் தெரு, சிவகாசி கிழக்கு – 626189, விருதுநகர் மாவட்டம். 4) இரா. பாலாஜி சி-69, ஆலாவூரணி, அண்ணா காலனி, திருத்தங்கல், விருதுநகர் மாவட்டம். 5) எம். செல்வம் 108, ஆலாவூரணி, அண்ணா காலனி, திருத்தங்கல், விருதுநகர் மாவட்டம்.

### திருப்பூர் மத்திய மாவட்டம்

#### திருப்பூர் தெற்கு மாநகரம்

திருப்பூர் மத்திய மாவட்டம், திருப்பூர் தெற்கு மாநகர கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளராக பணியாற்றி வந்த ரஜினி செந்தில் அவர்கள் திருப்பூர் மத்திய மாவட்ட அமைப்பாளராக நியமிக்கப்பட்டதால் அவருக்கு பதிலாக **க. சுரேஷ்** (3, தென்னம்பாளையம் கிழக்கு, வெள்ளியங்காடு 2வது வீதி, திருப்பூர் – 641604) அவர்கள் திருப்பூர் தெற்கு மாநகர கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 06-11-2025.

**வாகை சந்திரசேகர்**
தலைவர்
தி.மு.க. கலை இலக்கியப் பகுத்தறிவு பேரவை